(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.5/2016 |
| Deposition Of Witness for | : | PW3 |
| Name | : | **திரு.A.விஜயராஜ்** |
| Father's Name | : | திரு.S.அழகர்சாமி |
| Village | : | 13, காந்திஜி தெரு, அழகப்பன் நகர், மதுரை |
| Taluk | : | திருப்பரங்குன்றம் |
| Calling | : | வட்டாட்சியர்(ஓய்வு) |
| Age | : | 71 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **22nd August 2025.**

(1, 8, மற்றும் 11-ம் எதிரிகள் ஆஜர். எதிரிகள் 2, 3, 4, 6, 7, 9, 10 மற்றும் 12 ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது மதுரையில் அழகப்பன் நகரில் வசித்து வருகிறேன். கடந்த 31.12.2011-ம் தேதி இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர்

அலுவலகத்தில் வட்டாட்சியராக பணிபுரிந்து பணிஓய்வு பெற்றேன். கடந்த 2009 ம் வருடம் துணை ஆய்வுக்குழு அலுவலராக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்தேன்.

2. சிவகங்கை மாவட்டம், காரைக்குடி, தமிழ்நாடு வனத்தோட்ட கழக மண்டல மேலாளர் அலுவலகத்தில் மண்டல மேலாளர் மற்றும் அலுவலக பணியாளர்கள் திட்டப் பணிகளுக்கான காசோலைகள் வழங்கும்போது அந்த தொகையில் லஞ்சம் கேட்டு வாங்குவதாக கிடைக்கப்பெற்ற நம்பத்தகுந்த தகவலின்பேரில் கடந்த 26.08.2009–ம் தேதி மாலை 5.30 மணி முதல் இரவு 11.45 மணி வரை நான், இராமநாதபுரம் மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.K.ராஜா மற்றும் சிவகங்கை மாவட்டம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.A.ராஜா மற்றும் போலிஸ் பார்ட்டி சகிதம் மேற்படி அலுவலகத்தினை திடீர் சோதனை செய்தோம்.

3. திடீர் சோதனையின்போது மண்டல மேலாளர் அலுவலகத்தில் இல்லை. அவரைப்பற்றி கேட்க அலுவலக கண்காணிப்பாளர் திரு.ஜெயச்சந்திரன் மண்டல மேலாளர் வீட்டிற்கு சென்றிருப்பதாக தெரிவித்தார். மண்டல மேலாளருக்கு தகவல்

தெரிவித்து அலுவலகம் வரச்சொன்னதன்பேரில் மண்டல மேலாளர் ஆஜர் 1–ம் எதிரி திரு.நைனார்முகமது அலுவலகம் வந்தார். அவரது முன்னிலையில் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

4. அலுவலக கண்காணிப்பாளர் திரு.ஜெயச்சந்திரன் என்பவரின் கைப்பையை சோதனையிட அதில் மூன்று காக்கி நிறக் கவர்கள் இருந்தன. ஒரு கவரில் MD's Office 7000 என குறித்து ரூ.7000/–மும் இரண்டாவது கவரில் 10000 என குறித்து ரூ.10000/–மும் மூன்றாவது கவரில் கல்லல் 2700 என குறித்து ரூ.2700/–மும் இருந்தது. அது பற்றி கேட்க அவர் சரியான விளக்கம் கூறவில்லை. அவரது சட்டைப்பையை சோதனையிட்டபோது அதில் ரூ.100/–, ரூ.50/–, ரூ.20/–, ரூ.10/– ஆக மொத்தம் ரூ.1380/– இருந்தது. பணம் பற்றி கேட்க அதில் ரூ.200/– மட்டும் தான் தனது சொந்த செலவுக்காக வீட்டிலிருந்து கொண்டு வந்ததாக தெரிவித்தார். எனவே, ரூ.200/– அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது.

5. மேலும் அவரது கைப்பையை சோதனையிட குறிப்புகள் அடங்கிய இரண்டு துண்டு சீட்டுகள் இருந்தது. ஒரு துண்டுச்சீட்டில் சிவகங்கை Range என குறித்து ரூ. 49720/– என குறித்து அதற்கு 3%

வீதம் ரூ.1500/– என குறிக்கப்பட்டிருந்தது. மற்றொரு துண்டுச் சீட்டில் நான்கு தொகைகள் குறிக்கப்பட்டு மொத்தம் ரூ.1,93,300/– என குறிக்கப்பட்டு அதில் 3% வீதம் ரூ.6000/– என குறிக்கப்பட்டிருந்தது. துண்டுச்சீட்டுகள் பற்றி விளக்கம் கேட்க அவர் விளக்கம் எதுவும் சொல்லவில்லை. கல்லல் 2700 என குறித்த கவரில் இருந்த பணம் தான் கல்லல் வனச்சரகர் திரு.பாஸ்கரன் என்வரிடம் கடனாக வாங்கிய பணத்தை திரும்ப ஒப்படைப்பதற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். உடனே கல்லல் வனச்சரகர் திரு.பாஸ்கரன் என்பவரை தன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அலுவலகம் வரச்சொல்ல அவர் அலுவலகம் வந்தார்.

6. அவரை தனியே வைத்து விசாரணை செய்தேன். விசாரணையில் அவர் தான் இன்று 26.08.2009 மதியம் சுமார் 1.30 மணியளவில் அலுவலகம் வந்ததாகவும் கண்காணிப்பாளரை சந்தித்து விற்பனைப்படி மற்றும் படிமுன்பணமாக இரண்டு காசோலைகள் ரூ.90,050/– க்கு பெற்றுக்கொண்டு அதனை காரைக்குடி IDBI வங்கியில் சுமார் 3.00 மணியளவில் காசாக்கியதாகவும், சாதாரணமாக முன்பணம் பெறும் தொகையில் 3% வீதம் கண்காணிப்பாளருக்கு லஞ்சமாக வழங்குவது வழக்கம் என்றும் அதன்படி அன்று பெற்றுக்கொண்ட

தொகை ரூ.90,050/– க்கு 3% வீதம் ரூ.2700/– ஒரு காக்கி நிற கவரில் போட்டு விபரம் எழுதி கண்காணிப்பாளரிடம் லஞ்சமாக வழங்கியதாகவும் அலுவலக உதவியாளர் திரு.சிதம்பரம் என்பவருக்கு ரூ. 100/– லஞ்சமாக வழங்கியதாகவும் வாக்குமூலம் அளித்தார். மேலும், கண்காணிப்பாளர் தன்னிடம் கடன் ஏதும் வாங்கவில்லை என்றும் தானும் அவரிடம் கடன் ஏதும் வாங்கவில்லை என்றும் தெரிவித்தார். கவரில் இருந்த தனது கையெழுத்தை அடையாளம் காட்டினார். அவர் வாக்குமூலத்தை நான் பதிவு செய்தேன். கண்காணிப்பாளருக்கு மொத்தமாக ரூ.20,880/– இரண்டு துண்டுச்சீட்டுகள் மற்றும் குறிப்புகள் அடங்கிய மூன்று காக்கி நிற கவர்கள் கைப்பற்றப்பட்டது. கண்காணிப்பாளர் பீரோவில் நான்கு காக்கி நிற கவர்களில் தனித்தனியாக மொத்தம் ரூ.71,421/– இருந்தது. அது பற்றி கேட்க அது ஆறாம் ஊதியக் குழு நிலுவைத் தொகையை காசாக்கி வைக்கப்பட்டு திருவாளர்கள் ஐயப்பராஜ், ஜெயராமன், மாயாண்டி, ராமசாமி ஆகியோர்களுக்கு வழங்குவதற்காக வைக்கப்பட்டிருந்ததாக தெரிவித்தார். இது சம்பந்தமாக அலுவலக ஒப்புகை பதிவேடு சரிபார்க்கப்பட்டது. கண்காணிப்பாளர் தெரிவித்தது சரியாக இருந்ததால் மேற்படி தொகை மண்டல மேலாளர் வசம் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது.

7. மேலும் அலுலவக ரொக்க பதிவேட்டு பரிசீலிக்கப்பட்டது. ரொக்கப்பதிவேடு 11.08.2009 வரை மட்டுமே பராமரிக்கப்பட்டிருந்தது. கடந்த 15 நாட்களாக அப்பதிவேடு பராமரிக்கப்படவில்லை. இது முறையற்ற செயலாகும் என தெரிவிக்கப்பட்டது. அடுத்ததாக அலுவலக உதவியாளர் திரு.சிதம்பரம் என்பவரை சோதனையிட அவரது சட்டைப்பையில் ரூ.100/-, ரூ.50/-, ரூ.20/-, ரூ.10/- ஆக மொத்தம் ரூ.6770/- இருந்தது. பணம் பற்றி விசாரிக்க அவர் விளக்கம் எதுவும் தெரிவிக்கவில்லை. மேலும், விசாரிக்க கல்லல் வனச்சரகர் திரு.பாஸ்கரன் வங்கியின் காசோலை மாற்றி வந்தமைக்காக தன்னிடம் ரூ.100/- வழங்கியதாகவும் தான் அதை வாங்கி வைத்து கொண்டதாகவும் தெரிவித்தார். சரியான முகாந்திரம் தெரிவிக்காத கணக்கில் வராத ரூ.6770/- அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது.

8. அடுத்ததாக உதவியாளர் திருமதி.ரசியா பேகம் என்பவரை பெண் காவலர் எண்.1040 திருமதி.செல்வராணி என்பவர் மூலம் சோதனையிடப்பட்டது. அவரது கைப்பையில் ஒரு ரூ.500/- தாளும், 18 ரூ.100/- தாள்களும் ஆக மொத்தம் ரூ.2300/- இருந்தது. அது பற்றி அவர் விளக்கம் எதுவும் சொல்லவில்லை. மேலும், அலுவலகத்திற்கு அருகில்

வீடு இருந்தும் ரூ.2300/- கொண்டு வந்த காரணத்தை தெரிவிக்கவில்லை. அவரது கைப்பையை மேலும் சோதனையிட புதுவயல் Range என குறித்து ரூ.2300/- என குறித்து ஒரு துண்டுச்சீட்டும், புதுவயல் Range என குறித்து 10300 என்றும் ஒரு துண்டுச்சீட்டு இருந்தது. அந்த துண்டுச் சீட்டுகள் யாருடைய கையெழுத்து என்று அவர் தெரிவிக்கவில்லை. அவரிடமிருந்து ரூ.2300/- மற்றும் குறிப்புகள் அடங்கிய இரண்டு துண்டுச்சீட்டுகள் கைப்பற்றப்பட்டது.

9. அடுத்ததாக கணக்காளர் திருமதி.மனோரஞ்சித கலைச்செல்வி என்பவர் இன்று வருகைப் பதிவேட்டில் ஒப்பமிட்டிருந்தும் சோதனையின்போது அலுவலகத்தில் ஆஜரில் இல்லை. அது பற்றி கேட்க கண்காணிப்பாளர் திரு.ஜெயச்சந்திரன் அவர் அனுமதி விடுப்பில் சென்றிருப்பதாக தெரிவித்தார். ஆனால் அனுமதி கடிதம் ஏதும் அலுவலகத்தில் இல்லை. அவரது கைப்பையை மேலும் சோதனையிட ஒரு வெள்ளைநிற துண்டுச்சீட்டில் சிவப்பு நிற மையில் ரூ.11,500/- என குறித்து அதன் கீழே அலுவலக கண்காணிப்பாளர் முதல் அலுவலக காவலர் வரை இருக்கையின் பெயரை சுருக்கமாக எழுதி பங்கு சதவீத தொகை குறித்தும் கொடுக்கப்பட்ட தொகை குறித்தும் குறிப்புகள்

எழுதப்பட்டிருந்தது. அவரது கைப்பையில் இரண்டு காக்கி நிற கவர்கள் இருந்தது. அதில் ஒரு கவரில் ரூ.6900/– மற்றொரு கவரில் ரூ.2500/– மற்றொரு கத்தையாக ரூ.1600/–ம் ஆக மொத்தம் ரூ.11000/– இருந்தது. அது பற்றி கண்காணிப்பாளர் திரு.ஜெயச்சந்திரன் அவர்களிடம் விளக்கம் கேட்க அலுவலக பணியாளர்களுக்கு லஞ்சம் கொடுத்த விபரம் குறித்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அது மனோரஞ்சித கலைச்செல்வி, கணக்காளர் அவர்களிடம் கையெழுத்துதான் என்றும் உறுதி செய்தார். அவரை அலுவலக தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு விபரம் கேட்க தொடர்பு கொள்ளப்பட்டது. அவரது அலைபேசி எடுக்கப்படவில்லை. எனவே, அவரிடமிருந்து ரூ.11000/– மற்றும் 11500 என்று குறிக்கப்பட்ட ஒரு துண்டுச்சீட்டும் கைப்பற்றப்பட்டது.

10. அடுத்ததாக மண்டல மேலாளர், திரு.நைனார் முகமது என்பவரை அழைத்து சோதனையிடப்பட்டது. அவரது சட்டைப்பையில் ரூ.2445/– இருந்தது. எடுத்து ஆஜர் செய்தார். மேலும், அந்த தொகை தனது சொந்தப்பணம் என்று தெரிவித்தார். எனவே, ரூ.2445/– அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அன்று தைல மரக்குச்சிகளுக்கான ஏலம் முடிவு செய்யப்பட்டதாகவும் அது தொடர்பாக ஒப்பந்ததாரர்களிடம் பெற்ற

லஞ்ச பணம் மண்டல மேலாளர் வசம் இருப்பதாக கிடைக்கப்பெற்ற நம்பத்தகுந்த தகவலின்பேரில் விசாரிக்க வீட்டில் பணம் இருப்பதாக தெரிவித்து மேலும் அந்த பணம் தனது சம்பளப்பணம் என்று தெரிவித்தார். மேலும், தன் பெயரில் வங்கி கணக்கு ஏதும் இல்லை என்றும் தெரிவித்தார். உடனே அவரை ஆய்வுக் குழு ஆய்வாளர் திரு.K.ராஜா மற்றும் போலிஸ் பார்ட்டி சகிதம் அவரது வீட்டிற்கு அனுப்பி வைத்ததில் வீட்டில் ரூ.1,94,100/— மற்றும் திரு.நைனார் முகமது பெயரில் உள்ள காரைக்குடி IDBI வங்கி சேமிப்பு கணக்கு புத்தகத்தினையும் சிவகங்கை ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா வங்கி கணக்கு புத்தகத்தினையும் எடுத்து வந்து ஆஜர் செய்தார். பணம் பற்றி விசாரிக்க அவர் விளக்கம் எதுவும் சொல்லவில்லை. காரைக்குடி IDBI வங்கியின் 12.04.2009 ம் தேதியில் ஒரு சேமிப்பு கணக்கு தொடங்கி அதில் தனது நிலம் விற்ற பணத்தின் ஒரு பகுதியை Deposit செய்ததாக தெரிவித்தார். 10.07.2009 ம் தேதியில் சேமிப்பு கணக்கில் ரூ.8,01,000/— இருப்பு இருந்தது. சிவகங்கை SBI சேமிப்பு கணக்கில் ரூ.46,979/— இருப்பு இருந்தது. பணம் பற்றி சரியாக விளக்கம் அளிக்கவில்லை. எனவே, அவரிடமிருந்து ரூ.1,94,100/— மற்றும் இரண்டு சேமிப்பு கணக்கு புத்தகங்கள் கைப்பற்றப்பட்டது. சோதனை இறுதியில்

அலுவலக வருகை பதிவேடு சரிபார்க்கப்பட்டது. கண்காணிப்பாளர் திரு.ஜெயச்சந்திரன் 24.08.2009 முதல் 26.08.2009 வரை மூன்று நாட்களாக வருகை பதிவேட்டில் கையொப்பமிடவில்லை. மூன்று நாட்களுக்கு சுருக்கமும் எழுதப்படவில்லை. ரொக்கப்பதிவேடு பார்வையிடப்பட்டது. அது கடந்த 11.08.2009 வரை மட்டுமே பராமரிக்கப்பட்டிருந்தது. கடந்த 15 நாட்களாக ரொக்கப்பதிவேடு பராமரிக்கப்படாமல் இருந்தது. கண்காணிப்பாளரிடம் விபரம் கேட்க கணக்காளர் அப்பதிவேட்டை பராமரிக்காமல் இருந்துள்ளார் என தெரிவித்தார்.

11. சோதனையில் கீழ்க்கண்ட ஆவணங்கள் மற்றும் ரொக்கம் காவல் ஆய்வாளர் திரு.A.ராஜா அவர்கள் உதவியுடன் கைப்பற்றப்பட்டது.

1) என்னிடம் காண்பிக்கப்படும் **கல்லல் வனச்சரகருக்கு ரூ.49,350/– வழங்கப்பட்டதற்கான Payment Voucher, நாள்.26.08.2009 அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) **கல்லல் வனச்சரகருக்கு ரூ.40,700/– வழங்கப்பட்டதற்கான Payment Voucher, நாள்.26.08.2009 அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) **புதுவயல் வனச்சரகருக்கு ரூ.49,900/– வழங்கப்பட்டதற்கான Payment Voucher, நாள்.26.08.2009 அ.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) **2009–ம் ஆண்டிற்கான அலுவலக ஊழியர்களின் வருகைப்பதிவேடு அ.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) **2009–ம் ஆண்டிற்கான அலுவலக ஊழியர்களின் சிறுவிடுப்புபதிவேடு அ.த.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) **2008–2009, 2009–2010–ம் ஆண்டிற்கான காசோலை வழங்கும் பதிவேடு ஒன்று, அதில் 26.08.2009–ம் தேதிவரை உள்ள பதிவுகள் உள்ளது. அது அ.த.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7) **திரு.நைனார் முகமது பெயரில் இருந்த IDBI வங்கி சேமிப்பு புத்தகம்** ஒன்று, **அது அ.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8) **திரு.நைனார் முகமது பெயரில் இருந்த SBI வங்கி சேமிப்பு புத்தகம்** ஒன்று, **அது அ.த.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9) **கண்காணிப்பாளர் திரு.ஜெயச்சந்திரன் கைப்பையில் இருந்த MD's Office 7000 என்று குறிக்கப்பட்ட காக்கி நிற கவர்** ஒன்று, **அது அ.த.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10) **கண்காணிப்பாளர் திரு.ஜெயச்சந்திரன் கைப்பையில் இருந்த 10000 என்று குறிக்கப்பட்ட காக்கி நிற கவர் ஒன்று, அது அ.த.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11) **கண்காணிப்பாளர் திரு.ஜெயச்சந்திரன் கைப்பையில் இருந்த கல்லல் 2700 என்று குறிக்கப்பட்ட காக்கி நிற கவர் ஒன்று, அது அ.த.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12) **கண்காணிப்பாளர் திரு.ஜெயச்சந்திரன் கைப்பையில் இருந்த 1500 என்று குறிக்கப்பட்ட துண்டுச்சீட்டு ஒன்று, 6000 என்று குறிக்கப்பட்ட மற்றொரு துண்டுச்சீட்டு, 2900 என்று குறிக்கப்பட்ட துண்டுச்சீட்டு ஒன்று, அது முறையே அ.த.சா.ஆ.14, 15, 16** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

13) **உதவியாளர் திருமதி.ரசியா பேகம் கைப்பையிலிருந்து புதுவயல் Range என்றும் 10300 என்று எழுதப்பட்டிருந்து துண்டுச்சீட்டு ஒன்று** மற்றும் **உதவியாளர் திருமதி.மனோரஞ்சித கலைச்செல்வி என்பவரது கைப்பையிலிருந்து கைப்பற்றப்பட்ட சிவப்பு மையினால் ரூ11500/- என்று எழுதப்பட்ட துண்டுச்சீட்டு** முறையே **அ.த.சா.ஆ.17, 18** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

14) திரு.ஜெயச்சந்திரன் என்பவரிடம் கைப்பற்றப்பட்ட பணம்

ரூ.20,880/–, கணக்காளர் திருமதி.மனோரஞ்சித கலைச்செல்வி என்பவரது கைப்பையிலிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.11000/–, அலுவலக உதவியாளர் திரு.சிதம்பரம் என்பவரிடம் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.6770/–, உதவியாளர் திருமதி.ரசியா பேகம் என்பவரிடம் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.2300/–, மண்டல மேலாளர் திரு.நைனார் முகமது ஆஜர் செய்த பணம் ரூ.1,94,100/– என மேற்சொன்ன ஆவணங்கள் மற்றும் ரொக்கங்களை ஆய்வாளர் அவர்கள் உதவியுடன் கைப்பற்றப்பட்டன. *(மேற்சொன்ன ரூ.20,880/– + ரூ.11000/– + ரூ.6770/– + ரூ.2300/– + ரூ.1,94,100/– மொத்தம் ரூ.2,35,050/– நீதிமன்ற Fixed Deposit–ல் வைக்கப்பட்டுள்ளது.)*

12. **திரு.பாஸ்கரன் வனச்சரகர், கல்லல் அவர்கள் அளித்த வாக்குமூலம் ஒன்று அ.த.சா.ஆ.19** என குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் செயல்முறை குறிப்பு என்னால் தயாரிக்கப்பட்டதுதான். அதில் நானும், காவல் ஆய்வாளர் திரு.A.ராஜா அவர்களும், ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.K.ராஜா அவர்களும் கையொப்பம் செய்துள்ளார்கள். அந்த **அறிக்கை அ.த.சா.ஆ.20** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் முதல் தகவல் அறிக்கையை ஆய்வாளர் தயார்

செய்து நகல் வழங்கி அதற்காக Serial No.14–ல் கையொப்பம் செய்தேன். **முதல் தகவல் அறிக்கையில் உள்ள அ.சா.3 ன் கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.21** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கு தொடர்பாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**1, 2, 6, 9, 11–ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. சம்பவ சமயத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் எந்த துறையில் பணிபுரிந்தேன் என்றால் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரின் கீழ் தாசில்தாராகவும், மாவட்ட ஆய்வுக்குழு அலுவகத்தில் துணை ஆய்வுக்குழு அலுவலராகவும் பணியாற்றினேன். சோதனையின்போது என்னுடன் இருந்த திரு.K.ராஜா என்பவர் என்ன நிலையில் பணிபுரிந்தார் என்றால் உதவியாளராக பணிபுரிந்தார்.

2. சோதனை நாளன்று சிவகங்கை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளரிடமிருந்து சோதனை நடந்த வேண்டி எழுத்து பூர்வமாக கடிதம் எதுவும் வந்ததா என்றால் இல்லை, தொலைபேசி மூலமாக தகவல் வந்தது. தொலைபேசியில் தகவல் கொடுத்தது யார் என்றால் எனது மூத்த அதிகாரிக்குதான் தகவல் கிடைத்தது, யார் பேசியது என்று எனக்கு தெரியாது. திடீர் ஆய்வு நான் செல்வதற்கு எனக்கு

எழுத்துபூர்வமாக அனுமதி அளித்த எனது மூத்த அதிகாரியின் உத்தரவு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

3. காவல் ஆய்வாளர் திரு.A.ராஜா என்பவர்தான் என்னுடன் சோதனைக்கு வந்திருந்தாரா என்றால் ஆமாம். தனிப்பட்ட புகார் என்னிமிருந்து பெறாமலும் உடன் வந்தகாவல் ஆய்வாளர் திரு.A.ராஜா என்பவர் எந்தவித அறிக்கையும் பெறாமலும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதா என்றால் சோதனை அறிக்கையின் அடிப்படையில்தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. நான் சோதனை அறிக்கை எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அ.த.சா.ஆ 20–ஐ தாக்கல் செய்துள்ளேன். அ.த.சா.ஆ.20–ஐ நான் தயார் செய்யவில்லை என்றாலும் காவல் ஆய்வாளர் திரு.A.ராஜா தயார் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

4. தமிழ்நாடு வனத்தோட்ட கழகத்திற்கு என்னுடன் வந்த காவல் ஆய்வாளர் திரு.A.ராஜா என்பவர்தான் சோதனை ஆய்விற்கு வந்தார் என்றும் முதல் விசாரணை அதிகாரி மற்றும் சாட்சிகளை விசாரித்து இறுதி அறிக்கை வரை அவர்தான் விசாரணை அதிகாரியாக இருந்துள்ளார் என்றால் சரிதான். எதிரிகள் மீது காவல் ஆய்வாளர் திரு.A.ராஜா

அவர்களுக்கு இருந்த காழ்ப்புணர்ச்சி காரணமாகத்தான் செயல்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. சோதனையின் போது அலுவலகத்தில் இருந்த நபர்களிடம் கையிருப்பாக கைப்பற்றப்பட்ட பணம் ரூ.20000/– மட்டுமே என்றால் சரியல்ல.

5. நான் தமிழ்நாடு வனத்தோட்ட கழக காரைக்குடி மண்டல அலுவலகத்திற்கு சோதனைக்கு சென்ற போது மண்டல மேலாளர் 1–ம் எதிரிதான் என்றால் சரிதான். தமிழ்நாடு வனத்துறை என்பது வேறு, தமிழ்நாடு வனத்தோட்ட கழகம் என்பது வேறு என்றால் சரிதான். 1ம் எதிரி நைனார் முகமது தமிழ்நாடு வனத்துறையில் பணியாற்றிய போது மாற்றுப்பணியாக தமிழ்நாடு வனத்தோட்ட கழகத்தில் மண்டல மேலாளராக பணிபுரிந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தமிழ்நாடு வனத்தோட்ட கழகத்தின் முக்கிய பணி என்பது யூகலிப்டஸ் மரங்களை வளர்த்து அதிலிருந்து அதன் பல்புகளை எடுத்து பேப்பர் தயாரிக்கும் நிறுவனத்திற்கு அனுப்புவதும், முந்திரி பழங்களை விற்பதும்தான் முக்கியமான பணி என்றால் சரிதான். 1ம் எதிரிக்கு கீழ் வனச்சரகர், வனவர், வனக்காப்பாளர், வனக்காவலர் பணிபுரிந்தார்கள் என்றால் சரிதான்.

6. குற்றம் சாட்டப்பட்ட எதிரிகள் 01.04.2009 முதல் 26.08.2009

வரை குற்ற சம்பவ நாளாக குறிப்பிட்டு தைல மரங்களை வளர்க்காமலேயே பல்புகள் எடுக்காமலேயே எந்த வேலையையும் செய்யாமல் போலியாக வவுச்சர்கள் பெற்று சுமார் ரூ.4,00,000/- நஷ்டம் வனத்தோட்ட கழகத்திற்கு ஏற்படுத்தியதற்காகத்தான் குற்றப்பத்திரிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 26.08.2009-ம் தேதி திடீர் சோதனையில் பணம் கைப்பற்றப்பட்டதாக கூறியது குறித்து குற்றப்பத்திரிக்கையில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் எத்தனை எதிரிகள் காண்பிக்கப்பட்டுள்ளார்கள் என்றால் திரு.நைனார் முகமது, திரு.ஜெயச்சந்திரன், திருமதி.மனோரஞ்சித கலைச்செல்வி, திருமதி.ரசியா பேகம், திரு.சிதம்பரம் என மொத்தம் 5 நபர்கள் காட்டப்பட்டுள்ளார்கள். முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள 1வது எதிரியை தவிர மற்ற 4 நபர்கள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை. அவர்கள் மீது எந்த குற்றமும் எழவில்லை என்ற காரணத்தினால்தான் அவர் குற்றவாளியாக சேர்க்கப்படவில்லை என்றால் சரியல்ல.

7. எதிரிகள் மீது வனத்தோட்ட கழக அலுவலர்களிடமிருந்தோ,

வனத்துறை அலுவலர்களிடமிருந்தோ குற்றம் நடந்ததாக எந்த புகாரும் பெறப்படவில்லை என்றால் சரிதான். பணம் ரூ.1,94,100/– 1ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணத்தை அவரது சம்பள பணம் என்று கூறினார் என்றால் சரிதான். அ.த.சா.ஆ.20–ன் படி முதல் தகவல் அறிக்கையின்படியும் எவ்வித Criminal குற்றமும் எழாததால்தான் துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அந்த துறை ரீதியான விசாரணையில் முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள நபர்கள் மீது எந்த குற்றமும் நிரூபணம் செய்யப்படவில்லை என்றுதான் தீர்ப்பாகியுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

8. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் துறை ரீதியான நடவடிக்கைக்கு அனைத்து ஆவணங்களையும் அனுப்ப வேண்டும் என்று W.P.No/22687/2013–ல் உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேலும், துறை ரீதியான விசாரணை மேற்கொள்ளப்பட்டு எவ்வித குற்றமும் எழவில்லை என்று அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. துறை ரீதியாக விசாரணை நடத்தி முடிக்கப்பட்ட வழக்கில் காவல் ஆய்வாளர் திரு.A.ராஜா அவர்கள் எதிரிகள் மீது இருந்து காழ்ப்புணர்ச்சியின் காரணமாக உண்மைக்கு புறம்பாகவும்

இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கை செயலற்றுப்போன நிலையில் சட்டத்திற்கு புறம்பான வகையில் எந்த வித சம்பந்தமும் இல்லாமல் தைல மரங்கள் வளர்க்கப்பட்ட விஷயத்தில் தவறுகள் நடந்துள்ளன என்று எந்த வித சாட்சிகளும் ஆதாரமும் இன்றி வேலைகள் முறையாக நடைபெற்றிருந்த நிலையில் இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது தவறு என்றால் சரியல்ல.

9. 1ம் எதிரி மற்றும் மற்ற எதிரிகள் மீது வழக்கு தொடர்வதற்கு Sanction பெற வேண்டும் என்றால் சரிதான். ஏற்கனவே துறை ரீதியான விசாரணை முடிவு பெற்ற நிலையில் Sanction வழங்க முடியாது என அப்போதைய Secretary திரு.சங்கர் கூறிய பிறகு அவர் ஓய்வு பெற்ற பிறகு பின்பு வந்த அ.சா.1 திரு.மோகன்வர்கீஸ் என்பவரிடம் முழு சங்கதிகளையும் கூறாமல் Sanction உத்தரவு பெறப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஒரு வழக்கிற்கு முதல் தகவல் அறிக்கைதான் அடிப்படை என்றால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கை செயல் இழந்தநிலையில் அதன் பேரில் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கை

ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

ANITHACHRISTY J

Digitally signed by ANITHACHRISTY J
Date: 2025.08.25 10:04:01 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.